மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 34 ஆவது எண்ணுள்ள கேள்விக்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் பதில் அளித்துவிட்ட பிறகு இரண்டு வினாக்களுக்கும் சேர்த்து துணை வினாக்கள் அனுமதிக்கலாம் என்று கருதுகிறேன்.

***34. வினா.—திரு. ஆ. கு. சுப்பையா :**
திரு. சோ. அழகர்சாமி : } மதிப்பிற்குரிய
திரு. வி. கே. கோதண்டராமன் :

முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டவர்கள் எத்தனை நபர்களுக்குப் பென்ஷன் வழங்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது ?

(இ) மொத்தம் பரிசீலிக்கப்பட்ட மனுக்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) 95.

(இ) 327.

திரு. என். எஸ். வி. சித்தன் : சட்டப் பேரவைத்தலைவர் அவர்களே, இந்தப் பென்ஷன் அளிக்கும் திட்டத்தில் வேண்டுமென்றே காலதாமதம் செய்வதாக ஒரு எண்ணம் மக்களிடையே இருக்கிறது. ஆகவே, பென்ஷனைத் துரிதமாக வழங்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தியாகிகளுக்கு மான்யம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தவர்களே கால தாமதம் காட்டுகிறார்கள் என்று உறுப்பினர் சொல்வதைப்பற்றி நான் வியப்படைகிறேன்.

திரு. அ. பொ. அரசு : அரசியல் தியாகிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நிலங்களை விற்பதற்கோ அல்லது குத்தகைக்கு விடுவதற்கோ அனுமதி இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது பென்ஷன் தருவதைப் பற்றிய கேள்வி. குத்தகை பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : மன்றத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு வந்து ஏறத்தாழ 19 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் அதாவது அக்டோபர் 1966-ல் ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்கள் இதைக் கொண்டு வந்தார்கள். ஏன் இவ்வளவு தாமதித்துக் கொண்டு வந்தார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தியாகத்தைப்பற்றி விளக்கம் கூறுவதற்கு அவ்வளவு வருடங்கள் பிடித்தன என்று கருதுகிறேன்.

1967 ஜூன் 20]

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, தியாகிகளுக்குப் பென்ஷன் கொடுப்பதற்கு மிகவும் தீவிரமாகப் பரிசீலிப்பதைப் பாராட்டுவதுடன் 5,000 விண்ணப்பங்களுக்கு 100 விண்ணப்பங்கள்தான் பைசல் ஆகி இருக்கின்றன. ஆகையால் மீதி இருக்கக்கூடிய விண்ணப்பங்களையும் மிக வேகமாகப் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பழைய அரசைக் காட்டிலும் சற்று வேகமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. முனு. ஆதி : நிலம் பெற்ற தியாகிகளுக்கும் பென்ஷன் தரப்படுமா? அல்லது அவர்கள் அல்லாமல் மீதி பேர்களுக்கு மட்டும் தரப்படுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : வேறு தொழில் செய்கிறவர்களுக்கும் நிலம் வழங்கப்படுகிறது. ஆனால் வேறு வழி இல்லாமல் நலிவு அடைந்தவர்களுக்குமட்டும் பென்ஷன் அளிக்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஜில்லாவாரியாக தியாகிகள் யார் யார் என்ற பட்டியல் முதல் அமைச்சர் அவர்கள் கைவசம் இருக்கிறதா? இருந்தால் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கைவசம் இருக்கிறது. ஆனால் அதைப் படிப்பது சுவையாக இருக்குமா என்பது தெரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரை சொல்லமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கன்னியாகுமரியைப் பொறுத்த வரை மொத்த விண்ணப்பங்கள் 80. அதைப்பற்றி அறிக்கை கிடைத்திருப்பது 11. கலெக்டரிடமிருந்து வெளிவராமல் அவர் கைவசம் இருப்பது 69. அவர்கள் தியாகிகளா என்று அறிவதற்கு ஜெயில்களுக்கும் மற்ற இடங்களுக்கும் அனுப்பப்பட்டவை 6. பென்ஷன் வழங்கப்பட்டது ஒன்றும் இல்லை. பென்ஷன் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது 5.

திரு. இராம. அரங்கண்ணல் : புகழ்பெறும் தியாகிகளில் ஒருவரான நெல்லைச் சீமை வாஞ்சிநாத ஐயரின் குடும்பத்தினர் தியாகிகள் மான்யம் கோரி விண்ணப்பித்திருந்தார்கள். அதைக் கடந்த அரசாங்கம் கவனிக்காமல் இருந்தது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : வாஞ்சிநாத ஐயர் அவர்களுடைய பிரச்னையில் அவருடைய விதவையார் அவர்கள் மனுச் செய்து கொண்டார்கள். வாஞ்சிநாத ஐயர் அவர்கள்

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு மிகவும் பெயர் பெற்றவர். என்றாலும் அவர் இறுதியாகச் செய்த காரியத்தைத் தியாகிகளின் காரியம் என்று முன்னால் இருந்த அரசாங்கம் ஒப்புக்கொள்வதற்குக் கொஞ்சம் தயக்கம் இருந்தது. ஏனெனில், உயிர் இழந்தவர்கள் அல்லது அங்கஹீனமானவர்கள் அல்லது தியாகத்திற்குப் பிறகு நலிவுற்றவர்கள் ஆகியோருக்கு பென்ஷன் தருவது என்று முன்னால் தீர்மானித்திருந்தார்கள். வாஞ்சிநாத ஐயர் அவர்கள் ஆஷ் துரையை சுட்டுக் கொன்ற பிறகு தன்னைத்தானே மாய்த்துக் கொண்டதால் அவர் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் இழந்ததாகக் கருதப்படாமல் தானாகவே தன் உயிரைப் போக்கிக் கொண்டதால் கொடுப்பதா வேண்டாமா என்ற தயக்கம் இருந்தது. போன வாரம் நான் அதைப் பார்க்க நேரிட்டபோது, அவர் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டிருந்தாலும் அவர் உள் நோக்கம் சுதந்திரப் போராட்டம் என்ற காரணத்தினால் அவர் விதவைக்குப் பென்ஷன் அளிக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். (ஆரவாரம்)

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்தத் தியாகிகள் மனுக்களைத் தீர்த்து வைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதல்ல பிரச்னை; அந்த விதிகளில் இருக்கக்கூடிய பொடி வேலைதான். அது, குறைந்த பட்சம் மாதம் 100 ரூபாய் வருவாய்க்குள் இருக்க வேண்டும் என்பது. அதே நேரத்தில் மூன்று மாதம் தண்டனை அடைந்திருக்க வேண்டும் என்பதும் இருக்கிறது. ஒரே செக்ஷனின் கீழ் ஒரு மாஜிஸ்ட்ரேட் மூன்று மாதம் தண்டனை கொடுக்கிறார். ஒருவர் மூன்று ரூபாய் அபராதம் போடுகிறார். ஆகவே, காங்கிரஸ்காரர்கள் செய்திருக்கக்கூடிய அந்தத் தவறைத் திருத்தி குறைந்தபட்சம் 200 ரூபாய் மாத வருமானம், ஒரே செக்ஷனின் கீழ் எவ்வளவு தண்டனை அல்லது அபராதம் விதித்திருந்தாலும் அவர்களுக்கு இந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கக் கூடிய பென்ஷனைக் கொடுக்கக் கூடிய அடிப்படையில் அந்த விதிகளை மாற்றி, திருத்தியமைக்க சர்க்கார் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அங்கத்தினரின் யோசனை கவனத்தில் வைத்துக் கொள்ளப்படும்.

திரு. அ. கு. சுப்பையா: தியாகிகள் இன்றைய தினம் பல கட்சிகளைச் சார்ந்திருக்கிறார்கள். ஆகவே, கட்சிப் பாகுபாடு இல்லாமல் எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தத் தியாகிகளுக்கு இந்த உதவித்தொகை கொடுக்க அரசாங்கம் உத்தரவாதம் தருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கட்சிப் பாகுபாடு இல்லாமல்தான் இந்தப் பென்ஷன் அளிக்கப்படும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்ணாண்டோ: விடுதலைப் போராட்டக் காலத்தில் எந்தவிதமான பங்கும் ஏற்காதவர்கள் தங்களைத் தியாகிகளாகக் காட்டிக்கொள்வதற்குப் பொய்யான அத்தாட்சிகளை

1967 ஜுன் 20]

அதிகாரிகளிடம் இருந்து பெற்று, பென்ஷன் பெற்று வருகிறார்கள். இவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்கள் பென்ஷனை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: பொதுவாக குற்றங்களைச் செய்பவர்களுக்கு எப்படி தண்டனையோ அப்படிததான் இவர்களுக்கும்.

திரு. க. இராமமூர்த்தி: இந்தப் பென்ஷன் வழங்கும் திட்டத்தின்கீழ் சிலருக்கு ஏப்ரல் மாதத்தில் இருந்தும் சிலருக்கு அதற்கு முன்னால் இருந்தும்கூட பென்ஷன் வழங்கப்படுகிறது. இதையெல்லாம் ஒழுங்குபடுத்தி ஒரே தேதியில் இருந்து இந்தப் பென்ஷன் பெறுகிற முறையை அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: பொதுவாக தியாகிகளுக்கு மான்யம் வழங்குகிற திட்டத்தைப் பொறுத்து அந்தத் தியாகிகள் விஷயத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களோடு நிச்சயம் கலந்து கொள்ளப்படும்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: முதல் அமைச்சர் அவர்கள் பதிலில், தகுதிபற்றி அறிந்து கொண்டு அதற்குப் பிறகு அவர்களுக்குரிய உதவித் தொகை வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அவை, என்னென்ன தகுதி என்று தயவு செய்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தகுதிபற்றி நாம் அறிந்து கொள்வது அல்ல. ஜில்லா கலெக்டர் மூலம் அவர்கள் வாழ்கிற இடத்தில் அவர்களுக்கு யாரும் உதவி செய்வார் இல்லையா என்கிற தகவல் முதலில் அறியப்படும். பிறகு அவர்கள் தியாகிகள்தானா என்பதுபற்றி அறியப்படும். அவர்கள் சிறை தண்டனை பெற்றிருந்தால் எந்தச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்களோ அந்தச் சிறை அதிகாரிகள் ரிக்கார்ட் மூலம் அதுபற்றிய விவரங்கள் கண்டுபிடிக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி: மறைந்த தியாகிகளின் குடும்பத்தாருக்குப் பென்ஷன் அளிக்கப்படுமா? அதுபோன்று தீக்குளித்த தியாகிகளின் குடும்பத்தாருக்குப் பென்ஷன் கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தீக்குளித்த தியாகிகள் என்று அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது மொழிப் போராட்டத்திற்காகத் தீக்குளித்தவர்களை என்று நான் கருதுகிறேன். அவர்களைத் தமிழ்ச் சமுதாயம் தானே காப்பாற்றும் என்பதால் இந்தப் பென்ஷனை அவர்கள் கோரமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

[1967 ஜூன் 20

திரு. மு. ச. சிவசாமி: தியாகிகளுக்கு மானியமாகக் கொடுத்த நிலத்தை விற்கலாமா? அப்படி விற்றிருக்கிறார்கள் என்றால் விற்றவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து அந்த நிலத்தை மீண்டும் சர்க்கார் உடைமையாக்கிக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தியாகிகளுக்குத் தரப்படுகிற நிலத்தை விற்கக் கூடாது என்பதுதான் விதி. பல விதிகள் மீறப்படுவதைப் போல் இதிலும் சிலர் விதிகளை மீறியிருக்கலாம். அது அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அதுபற்றி விசாரணை நடத்துவதற்கு ஏதுவாகயிருக்கும்.

திரு. முனு. ஆதி: வைக்கம் வீரர் பெரியார் அவர்களுக்குத் தியாகிகள் நிலம் கொடுக்க முந்திய அரசாங்கம் முன்வந்ததா? அப்படி இல்லை என்றால் நம் அரசாங்கமாவது கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்த அரசாங்கம் அமைந்த பிறகு தியாகிகள் நிலம்தான் பெரியார் அவர்களுக்குத் தரவேண்டும் என்பதல்ல. இந்த அமைச்சரவையே அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிற பரிசுதான்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: தியாகிகள் நிலங்களைப் பலர் ஆக்கிரமித்து தியாகிகளை அந்த நிலங்களுக்குப் போக விடாமல் செய்திருக்கிறார்கள். அதுபற்றி இந்த அரசு தனிக் கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: யாருடைய நிலத்தை யார் ஆக்கிரமித்தாலும் அது அறிவிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கைகள் நிச்சயம் எடுக்கப்படும்.

திரு. வ. ஜார்ஜ்: சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு அளிக்கும் சலுகைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் போராட்டத் தியாகிகளுக்கும், அந்தப் போராட்ட சமயத்தில் அவர்களுக்கு ஆக்கம் அளித்திருக்கும் இந்தச் சர்க்கார் கட்சியினரின் அரசு அச்சலுகைகளை அளிப்பதற்குரிய திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இத்திட்டம் விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றியது. திருவிதாங்கூர் அரசை எதிர்த்து விடுதலைப் போராட்டம் நடத்தியவர்கள் இந்தப் பட்டியலின் கீழ் வரவேண்டும் என்று கருதுவார்களானால் அது பற்றித் தனியாக யோசித்து முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வி, 35.

(2) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

(இ) மூல வினா கேட்டிருக்கும் உறுப்பினருக்கு துணை வினாக்கள் கேட்கச் சலுகை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், நான் இரண்டு கேள்விகள் போட்டிருக்கிறேன்.

ஓரே ஒரு உப கேள்வி போட தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். தலைவர் அவர்களுக்கு நாங்கள் மிகவும் மரியாதை கொடுத்து மிகவும் கட்டுப்பட்டு நடக்கிறோம். கேள்வி நேரம் என்பது மிகவும் முக்கியமானது. ஒருவர் வேட்டையாட ஆரம்பித்தால் தொடர்ந்து அவர் வேட்டையாடிய பிறகு மற்றவர்களுக்கு களுக்கு விடவேண்டும் என்பதுதான் முறை. கேள்விக் கணை கொடுத்தவருக்கு முதலில் சலுகை கொடுத்த பிறகு மற்றவர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் தலைவர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. கோதண்டராமன் அவர் கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை நியாயமானது. விதிகளின்படி யார் கேள்வி கேட்கிறாரோ அவருக்குத் துணைக் கேள்விகள் கேட்க உரிமையுண்டு. இரண்டு கேள்விகளை நாம் ஒன்றாக எடுத்துக் கொண்ட காரணத்தினால் ஒரு துணைக் கேள்வியைக் கேட்க அனுமதித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை மீண்டும் ஒரு துணைக் கேள்வி கேட்கும்படி அனுமதிக்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள் (தொடர்ச்சி)

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்தத் தியாகிகளுக்குப் பென்ஷன் கொடுக்கக்கூடிய விதியிலே வருவாய் சம்பந்தப்பட்ட, பிரச்சினையில் இன்றைக்கு ஒரு விதி இருக்கிறது. ஒரு குடும்பத் திலே தியாகியினுடைய நெருங்கிய உறவினருடைய வருவாய்கூட கணக்கில் எடுக்கப்படுகிறது. இந்தக் காலத்திலே பிள்ளைகூட தகப்பனுக்குச் சோறு போடுவதில்லை, அவர் அவர்பாட்டுக்குப் போவார், இவர் இவர்பாட்டுக்குப் போவார். இப்படிப்பட்ட நிலை யில் நெருங்கிய உறவினர் வருவாயைக் கணக்கில் எடுக்காமலும், அதேபோன்று சட்டசபையின் எம்.எல்.ஏ., எம்.பி. போன்றவர் களுடைய சம்பளமும் ஸ்காலர்ஷிப் போன்றவற்றிற்கு அலவன் ஸாகத்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேள்வி கேட்கத்தான் அனுமதித்தேன். சிறிய சொற்பொழிவு ஆற்றலாகாது. ஆகவே, அருள்கூர்ந்து கேள்வியைக் கேட்கவும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நெருங்கிய உறவினருடைய வருவாயை எடுத்துக்கொள்ளாமலும், எம்.எல்.ஏ., எம்.பி., எம்.எல்.சி., போன்றவர்களுடைய சம்பளத்தை ஸ்காலர்ஷிப் சம்பந்தப்பட்டவற்றிற்கு எப்படி அலவன்ஸாகக் கருதுகிறார்களோ அதேபோன்று இந்த பென்ஷன் அளிக்கின்ற நோக்கிலும் அதை அலவன்ஸாகக் கருதுவதற்கான முறையில் அந்த விதியைத் திருத்த முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் அங்கத்தின ருடைய கருத்து தியாகிகள் எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி-யாக இருக்கின்றவர்களுக்கும் பென்ஷன் தரப்படவேண்டுமென்று

கேட்கிறார் என்று நினைக்கிறேன். பென்ஷன் என்ற வார்த்தைக்குப் பொருளே வேறு எந்தத் தொழிலும் செய்யமுடியாமல் இருந்து, எந்தவிதமான வருவாயும் பெறமுடியாமல் இருப்பவர்களுக்குக் கொடுப்பதுதான் பென்ஷன். பென்ஷனும் வாங்கிக் கொண்டு சம்பளமும் வாங்கலாமென்பது நியாயமாக இருக்காதென்று கருதுகிறேன். அது தேவை என்றால் அதைப்பற்றிக் கவனிக்கலாம். ஆனால், அது நியாயமாக இருக்காது.

மாநிலத்திற்குக் கன ரக இயந்திரத் தொழிற்சாலை

35. வினா—திரு. எஸ். சி. சுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து சீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் கன ரக இயந்திரங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இதை இனிமேலாவது அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கேள்வியில் கனரகத் தொழில் என்றுதான் இருக்கிறதே ஒழிய, எந்த வகைக்கு என்று தெளிவாக இல்லை. கனரகத் தொழில்கள் பலவகையாக இருக்கக் கூடும். ஆகவே கனரகத் தொழில் என்ன வகையிலே என்று கேட்டு இருந்தால் பதில் அளிக்கலாம். ஆனால், கேள்வி அப்படியில்லை, பொதுவாக, கனரகத் தொழில் என்றுதான் இருக்கிறது. தற்பொழுது அரக்கோணத்திலே ருஷ்யாவின் உதவியுடன் வார்ப்படத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படக்கூடும். அதேபோன்று அரசாங்கத்தின் சார்பிலே ராஜபாளையத்திலே சிமின்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, அந்த வகையிலேயும் தொழிற்சாலை அங்கு வரக்கூடும்.

DR. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware that the Arakonam plant requires a lot of raw materials such as scrap iron? If so, has he taken into consideration the question whether this plant would get adequate quantity of raw materials in the shape of scrap iron?

THE HON. THIRU C. N. ANNADURAI : All the necessary factors have been taken into consideration. We are assured of adequate raw materials.